
# தேவனின் தெரிந்தெடுப்பு




தேவனின் தெரிந்தெடுப்பு என்பது எப்பொழுதும் வித்தியாசமானதும், நம்மால் விளங்கிகொள்ள முடியாததுமாயிருக்கிறது. பழைய ஏற்பாட்டு காலத்திலிருந்து இன்றுவரைக்கும், தேவனால் பயன்படுத்தபட்ட மனிதர்களின் வாழ்க்கை பிண்ணனி, மிகவும் சாதாரணமானதும், சில நேரங்களில் தேவனுக்கும் அவர்களுக்கும் சம்பந்தமில்லாததுமாயிருந்தது. உதாரணமாக, சமாரிய ஸ்திரீ, பவுல், பேதுரு, மோசே, தாவீது, ஆமோஸ் தீர்க்கதரிசி போன்றவர்கள். மேற்கூறப்பட்டுள்ள ஒவ்வொருவருடைய வாழ்க்கையும், ஏதோ ஒரு திசையில் சென்று கொண்டிருந்தபொழுது, ஆண்டவர் அவர்களை சந்தித்து, அவர்களை தமக்கு உகந்த பாத்திரங்களாக மாற்றி, அவர்களின் மூலம் வல்லமையான காரியங்களை செய்தார்.

**யோவான் 4 ஆம்** அதிகாரத்தில் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து சமாரிய ஸ்திரீயை சந்திப்பதை நாம் காணலாம். **யோ 4:4-7 வசனங்களில் கூறப்பட்டுள்ளபடி ”அவர் சமாரியா நாட்டின் வழியாய்ப் போகவேண்டியதாயிருந்தபடியால், யாக்கோபு தன் குமாரனாகிய யோசேப்புக்குக் கொடுத்த நிலத்துக்கு அருகே இருந்த சமாரியாவிலுள்ள சீகார் என்னப்பட்ட ஊருக்கு வந்தார். அங்கே யாக்கோபுடைய கிணறு இருந்தது; இயேசு பிரயாணத்தினால் இளைப்படைந்தவராய் அந்தக் கிணற்றினருகே உட்கார்ந்தார்; அப்பொழுது ஏறக்குறைய ஆறாம்மணி வேளையாயிருந்தது. அவருடைய சீஷர்கள் போஜனபதார்த்தங்களைக் கொள்ளும்படி ஊருக்குள்ளே போயிருந்தார்கள்.**“, ஆண்டவர் இளைப்படைந்தவராய்,

சற்று இளைப்பாற அங்கே உட்கார்ந்தார். ஆண்டவர் மாம்ச சரீரத்தின்படி இளைப்படைந்தவராய் இருந்தாலும், அங்கு இருந்த அந்த நேரத்திலும், பிதாவாகிய தேவனுடைய திட்டத்தை நிறைவேற்றுகிறவராகவே இருந்தார்.

**வசனம் 8 கூறுகிறது, "அப்பொழுது சமாரியா நாட்டாளாகிய ஒரு ஸ்திரீ தண்ணீர் மொள்ள வந்தாள். இயேசு அவளை நோக்கி: தாகத்துக்குத் தா என்றார்.".** இங்கு நடக்கும் காரியங்கள் யாவும் யதார்த்தமாய் நடப்பதைபோல் காணப்பட்டாலும், சமாரிய மக்களின் இரட்சிப்பிற்கான ஓர் மிக பெரிய திட்டம் நிறைவேறி கொண்டிருந்தது. இங்கு கவனிக்க வேண்டிய ஒன்று என்னவென்றால், சமாரிய மக்களின் நடுவில் எத்தனையோ நீதிமான்கள், **பரிசுத்தவாங்கள், திறமையானவர்கள் இருந்திருக்கலாம். ஆனால் ஆண்டவர் அவர்கள் வழியாய் இரட்சிப்பின் செய்தியை அறிவிக்காமல், தன் வாழ்க்கையே கேள்விகுறியாக இருந்த ஒரு ஸ்திரீயை சந்தித்து, அவளுக்கு தேவனுடைய காரியங்களை வெளிப்படுத்தி, அவளுடைய மன ஐயங்களை நீக்கி, தாம் மேசியா என்பதை அவளுக்கு வெளிப்படுத்தி, அவள் மூலமாய் அவளுடைய பட்டணத்தையே இரட்சித்தார். வெளிப்படையாக இவை எதற்கும் அந்த பெண் தகுதியுள்ளவளாக காணப்படவில்லை. அவள் வாழ்க்கை அலங்கோலமாய் காணப்பட்டாளும், இருதயத்தில் அவளுக்கு இருந்த கேள்விகளை தேவன் அறிந்திருந்தார். யோவான் 4 ஆம் அதிகாரம் முழுவதும் அவள் ஆண்டவரோடு உரையாடுவதை வைத்து நாம் அதை விளங்கி கொள்ளலாம்.**

**ஆண்டவரே என்று கூப்பிடுவதும், ஜீவத்தண்ணீரை தனக்கும் தர வேண்டும் என்று ஆவல் கொண்டதும், தன் வாழ்க்கையை பற்றி ஆண்டவர் கூறியவுடன், அவர் வார்த்தைகள் தீர்க்கதரிசனமானவை என்பதை அறிந்து கொண்டதும், தேவனை தொழுது கொள்வதை குறித்தும், எல்லாவற்றிற்கும் மேலாக** "அந்த ஸ்திரீ அவரை நோக்கி: கிறிஸ்து என்னப்படுகிற மேசியா வருகிறார் என்று அறிவேன், அவர் வரும்போது எல்லாவற்றையும் நமக்கு அறிவிப்பார் என்றாள்." **(யோ 4:25) என்று அறிக்கையிட்டதும், அவளுடைய உள்ளான தூய்மையை பிரதிபலிக்கிறது. வெளிப்பார்வையில் அழகாக வாழ்ந்து கொண்டு இருதயத்தில் தீய எண்ணம் கொண்டிருப்பவரை காட்டிலும், வாழ்க்கையின் சூழ்நிலையின் காரணமாக அழுக்கான ஒரு வாழ்க்கை வாழ்ந்தாலும், உள்ளான தூய்மையையே, வாஞ்சையையே ஆண்டவர் பார்க்கிறார்.**

யோ 4: 28-30 கூறுகிறது "அப்பொழுது அந்த ஸ்திரீ, தன் குடத்தை வைத்துவிட்டு, ஊருக்குள்ளே போய், ஜனங்களை நோக்கி: நான் செய்த எல்லாவற்றையும் ஒரு மனுஷன் எனக்குச் சொன்னார்; அவரை வந்து பாருங்கள்; அவர் கிறிஸ்துதானோ என்றாள். அப்பொழுது அவர்கள் ஊரிலிருந்து புறப்பட்டு அவரிடத்தில் வந்தார்கள்.", **ஆம் இங்கு இந்த ஸ்திரீயின் மூலமாய் நற்செய்தி அறிவிக்கபடுகிறது. அதுவும் அவள் தன் சாட்சியை கூறி (நான் செய்த எல்லாவற்றையும் சொன்னார்), கிறிஸ்துவாகிய மேசியாவை அறிவித்தாள். இதன் பின்பாக அவளுடைய வாழ்க்கை ஒரு மேன்மையான வாழ்க்கையாக மாறியிருக்கும் என்பதில் ஐயமில்லை.**

**பவுலின் வாழ்க்கையிலும் ஆண்டவர் இதனையே செய்தார்.** அப் 8:1-3 வசனங்களில் "அவனைக் கொலைசெய்கிறதற்குச் சவுலும் சம்மதித்திருந்தான். அக்காலத்திலே எருசலேமிலுள்ள சபைக்கு மிகுந்த துன்பம் உண்டாயிற்று. அப்போஸ்தலர்தவிர, மற்ற யாவரும் யூதேயா சமாரியா தேசங்களில் சிதறப்பட்டுப்போனார்கள். தேவபக்தியுள்ள மனுஷர் ஸ்தேவானை எடுத்து அடக்கம்பண்ணி, அவனுக்காக மிகவும் துக்கங்கொண்டாடினார்கள். சவுல் வீடுகள்தோறும் நுழைந்து, புருஷரையும் ஸ்திரீகளையும் இழுத்துக்கொண்டுபோய், காவலில் போடுவித்து, சபையைப் பாழாக்கிக்கொண்டிருந்தான்." **பவுலாகிய சவுலின் கொடூரமான காரியங்கள் கூறப்பட்டுள்ளன. ஸ்தேவான் கொலை செய்யபடுவதற்கு சவுல் உடந்தையாயிருந்தான். மேலும்** வசனம் 3 கூறுகிறது "அவன் சபையைப் பாழாக்கிக்கொண்டிருந்தான்." **என்று.**

**இங்கு மறுபடியும் நாம் தேவனின் ஒரு வித்தியாசமான தெரிந்தெடுப்பை காணலாம். ஆண்டவரால் அழைக்கப்பட்ட அப்போஸ்தலர்கள் இருந்தும், பேதுருவின் மற்றும் மற்ற அப்போஸ்தலர்களின் போதனையால் இரட்சிக்கப்பட்டு சபையில் சேர்ந்த எத்தனையோ ஆயிரக்கணக்கான விசுவாசிகள் இருக்க, ஸ்தேவான், பிலிப்பு போன்றவர்கள் வைராக்கியமாய் ஊழியம் செய்ய,** அப் 8:4 இன்படி "சிதறிப்போனவர்கள் எங்குந்திரிந்து, சுவிசேஷவசனத்தைப் பிரசங்கித்தார்கள்.", **இப்படியாக ஊழியம் பலவாறு பெருகிகொண்டிருக்க, இவர்களில் ஆண்டவர் ஒருவரையும் தெரிந்துகொள்ளாமல், சபையை பாழாக்கி கொண்டிருந்த சவுலை ஆண்டவர் தெரிந்து கொண்டு, அவனுக்கு காட்சியளித்து, அவன் வாழ்க்கையின் நோக்கத்தை அப்படியே தலைகீழாக மாற்றி போட்டார்.**

அப் 9:10-16 வசனங்களில் ஆண்டவர் பவுலை குறித்து ஒரு திட்டம் வைத்திருந்தார் என்பதை நாம் அறிந்து கொள்ளலாம். கலா 1:22-24 வசனங்களில் கூறப்பட்டுள்ளபடி “மேலும் யூதேயாதேசத்திலே கிறிஸ்துவுக்குள்ளான சபைகளுக்கு முகமறியாதவனாயிருந்தேன். முன்னே நம்மைத் துன்பப்படுத்தினவனே, தான் அழிக்கத்தேடின விசுவாசத்தை இப்பொழுது பிரசங்கிக்கிறான் என்பதைமாத்திரம் அவர்கள் கேள்விப்பட்டிருந்து, என்னைப்பற்றித் தேவனை மகிமைப்படுத்தினார்கள்.“ **தான் அழிக்கத்தேடின விசுவாசத்தை எங்கும் பிரசங்கிக்கிறவராய் ஆண்டவர் அவரை மாற்றினார்.**

1 கொ 15:8-10 வசனங்களில் அவரே இதை அறிக்கையாக கூறுகிறார் “எல்லாருக்கும் பின்பு, அகாலப்பிறவிபோன்ற எனக்கும் தரிசனமானார். நான் அப்போஸ்தலரெல்லாரிலும் சிறியவனாயிருக்கிறேன்; தேவனுடைய சபையைத் துன்பப்படுத்தினதினாலே, நான் அப்போஸ்தலனென்று பேர்பெறுவதற்கும் பாத்திரன் அல்ல. ஆகிலும் நான் இருக்கிறது தேவகிருபையினாலே இருக்கிறேன்; அவர் எனக்கு அருளிய கிருபை விருதாவாயிருக்கவில்லை; அவர்களெல்லாரிலும் நான் அதிகமாய்ப் பிரயாசப்பட்டேன்; ஆகிலும் நான் அல்ல, என்னுடனே இருக்கிற தேவகிருபையே அப்படிச் செய்தது.” **தான் அழிக்க நினைத்த சபையையே கட்டும் பணியை செய்யும்படியாய் ஆண்டவர் அவரை மாற்றினார்** (1 கொ 3:10). **அதுவும் மிகுந்த பிரயாசத்தோடு, கொடிய உபவத்திரவங்கள் மத்தியிலும் வைராக்கியமாய் ஆண்டவருடைய ஊழியத்தைச் செய்தார்** (2 கொ 11:23-28).

**ஆண்டவருக்காக எல்லாவற்றையும் நஷ்டமும், குப்பையுமாக எண்ணினார்** “அவருக்காக எல்லாவற்றையும் நஷ்டமென்று விட்டேன்; குப்பையுமாக எண்ணுகிறேன்.“(**பிலி** 3:11). அப் 26:27-29 வசனங்களில் **அகிரிப்பா ராஜாவின் முன் தன் சாட்சியை வெளிப்படுத்தின பவுல்,** “அகிரிப்பா ராஜாவே, தீர்க்கதரிசிகளை விசுவாசிக்கிறீரா? விசுவாசிக்கிறீர் என்று அறிவேன் என்றான். அப்பொழுது அகிரிப்பா பவுலை நோக்கி: நான் கிறிஸ்தவனாகிறதற்குக் கொஞ்சங்குறைய நீ என்னைச் சம்மதிக்கப்பண்ணுகிறாய் என்றான். அதற்குப் பவுல்: நீர் மாத்திரமல்ல, இன்று என் வசனத்தைக் கேட்கிற யாவரும், கொஞ்சங்குறையமாத்திரம் அல்ல, இந்தக் கட்டுகள் தவிர, முழுவதும் என்னைப்போலாகும்படி தேவனை வேண்டிக்கொள்ளுகிறேன் என்றான்.“ **என்று கூறுவதிலிருந்து அவர் எப்படிப்பட்ட பூரண நிலையை அடைந்தார் என்பதை நாம் விளங்கிகொள்ளலாம்.**

மோசேயின் வாழ்வில் நடந்ததும் இப்படிப்பட்ட நிகழ்வே. அவர் எகிப்தில் இருந்த இளமையான காலத்தில் தன் சகோதரராகிய எபிரேய மனுஷர்களுக்கு உதவ வேண்டும் என்ற உத்வேகத்துடன் செயல்பட்ட காலத்தில் (யாத் 2:11-15), ஆண்டவர் மீட்பின் பணிக்கு அவரை அழைக்கவில்லை, ஆனால் பெலன் எல்லாம் குறைந்து போய், திக்குவாயும் மந்த நாவும் உள்ளவராய் (யாத் 4:10) இருந்த காலத்தில், தன்னால் ஆண்டவரின் பணியை செய்யமுடியாது என்று நினைத்த காலத்தில் ஆண்டவர் அவரை அழைத்தார். இதை போல் ஆமோஸ் தீர்க்கதரிசியும் ஆண்டவர் தன்னை அழைத்த விதத்தைப்பற்றி ஆமோஸ் 7:14,15 வசனங்களில் "ஆமோஸ் அமத்சியாவுக்குப் பிரதியுத்தரமாக: நான் தீர்க்கதரிசியுமல்ல, தீர்க்கதரிசியின் புத்திரனுமல்ல; நான் மந்தை மேய்க்கிறவனும், காட்டத்திப்பழங்களைப் பொறுக்குகிறவனுமாயிருந்தேன். ஆனால் மந்தையின் பின்னாலே போகிறபோது என்னைக் கர்த்தர் அழைத்து, நீ போய் என் ஜனமாகிய இஸ்ரவேலுக்கு விரோதமாகத் தீர்க்கதரிசனம் சொல்லு என்று கர்த்தர் உரைத்தார்." என்று கூறியுள்ளார்.

இவை எல்லாவற்றிலும் நாம் அறிந்து கொள்கிற சத்தியம் என்னவென்றால், தேவனின் தெரிந்தெடுப்பு என்பது மிகவும் வித்தியாசமானது. அவர் தெரிந்தெடுக்கும் மனிதர்களும், அவர்களை அழைக்கும் நேரமும் மிகவும் ஆச்சரியமானது. சமாரிய ஸ்திரீ, பவுல் போன்றோரின் வாழ்க்கை மிகவும் ஒரு மோசமான சூழ்நிலையில் இருந்தது, ஆனால் ஆண்டவர் அவர்களோடு தனியாக இடைப்பட்ட பொழுது, "எவனுக்கு அதிகமாய் மன்னித்துவிட்டானோ அவனே அதிக அன்பாயிருப்பான்", (லூக் 7:43) என்ற சத்தியத்தின்படி, மோசமான வாழ்க்கை வாழ்ந்த என்னையும் தேவன் சந்தித்து, மன்னித்து, இவ்வளவு கனமான ஊழியத்தை என் கையில் கொடுத்தாரே என்பதை அவர்கள் உணர்ந்த பொழுது, அது அவர்களை தேவனுக்காக வைராக்கியமாக வாழ செய்தது. இன்றும் பாரம்பரிய கிறிஸ்தவ பிண்ணணியத்தில் இருந்து வருவோரை பார்க்கிலும், மோசமான வாழ்க்கை வாழ்ந்து, பாவ சேற்றில் உழன்று கொண்டிருந்த மக்கள் இரட்சிக்கப்பட்டு சபைக்குள் வரும்பொழுது, அவர்கள் தேவனுக்காய் மிகவும் வைராக்கியத்தோடு வாழ்கின்றனர், வல்லமையாய் ஊழியம் செய்து அநேகரை கிறிஸ்துவுக்குள்ளாய் கொண்டு வருகின்றனர்.

மோசேயை போல, அவர் தன் சுயபெலனை சார்ந்து இருந்த பொழுது, துடிப்புடன் இருந்த பொழுது அவரை அழைக்காமல், 40 வருடங்கள் கழித்து, அவர் பெலன் குறைந்த நிலையில், எல்லாவற்றிற்காகவும் தேவனுடைய பாதத்தில் விழ கற்று கொண்ட நேரத்தில்,

வாழ்க்கையில் பொறுமை, சகிப்பு தன்மை ஆகியவற்றை கற்று கொண்ட நிலையில் தேவன் அவரை அழைத்தார், இங்கு நாம் அறிந்துகொள்ளும் சத்தியம், தேவனுடைய ஊழியத்தை செய்வதற்கு நமக்கு எது தேவை என்பதை ஆண்டவரே அறிந்திருக்கிறார். அந்த குணமோ, திறமையோ நம்மில் உருவாகும் வரைக்கும் தேவன் நம்மை காத்திருக்க செய்து, அவருடைய ஏற்ற காலத்தில் நம்மை தம் ஊழியத்திற்கு என அழைக்கிறார்.

எனவே நாம் நமக்கு என்ன திறமை இருக்கிறது என்று பார்த்துக்கொண்டு இராமல், ஆண்டவர் நம்மிடம் எதை எதிர்பார்கிறார் என்பதை உணர்ந்து, அதற்கேற்ற விதமாய் நம்மை மாற்ற தேவனிடம் அர்பணிக்க வேண்டும். இறுதியாக ஆமோஸ் தீர்க்கதரிசி கூறியதை போல, நம் வாழ்க்கை பிண்ணனி எப்படியிருந்தாலும், நம்முடைய தகுதி எப்படிபட்டதாய் இருந்தாலும், ஆண்டவர் தம்முடைய ஊழியத்திற்கு என்று அழைத்தால், அது எப்படிப்பட்ட சவால் நிறைந்த ஊழியமானாலும், அதை செய்து நிறைவேற்ற ஆண்டவர் பெலன் தருவார். எனவே ஆண்டவர் நம்மை தமக்கென அழைக்கும் நேரத்தில் கீழ்ப்படிதலோடு அவருடைய அழைப்பை ஏற்று, அதை அவருடைய சித்தத்தின்படியே செய்து நிறைவேற்றுவதே நம் ஒவ்வொருவருடைய இவ்வுலக வாழ்க்கையை ஓர் அர்த்தமுள்ளதாக்குகிறது. “மேலும், தம்முடைய ராஜ்யத்திற்கும் மகிமைக்கும் உங்களை அழைத்த தேவனுக்கு நீங்கள் பாத்திரராய் நடக்கவேண்டுமென்று,“ **1 தெச 2:11** கூறுகிறது. அப்பொழுது ஆண்டவர், “நல்லது, உத்தமமும் உண்மையுமுள்ள ஊழியக்காரனே, கொஞ்சத்திலே உண்மையாயிருந்தாய், அநேகத்தின்மேல் உன்னை அதிகாரியாக வைப்பேன், உன் எஜமானுடைய சந்தோஷத்திற்குள் பிரவேசி“, **(மத் 25:21)** என்று கூறி நம்மை வரவேற்பார். ஆமென், அல்லேலூயா.